மாலைமலர்



# பால தேவி சந்திரசேகருக்கு விருது

கிருஷ்ண கான சபாவின் 43-வது நாட்டிய கலா மாநாடு சென்னையில் தொடங்கியது. இந்த விழாவின் ஒரு பகுதி யாக, பரதநாட்டிய துறையில் சிறந்த ஆய்வாளராகவும், கலைஞராகவும் திகழும் பால தேவி சந்திரசேகரின் கலை சேவையை பாராட்டி, அவருக்கு 'நாட்டிய கலா விசாரதா ஹா' என்ற உயரிய விருது வழங்கப்பட்டது. இந்த விருதினை சித்ரா விஸ்வேஸ் வரன் மற்றும் டாக்டர் சந்திர பிரகாஷ் திவேதி உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் வழங்கி னர். பரதநாட்டியத்தில் தத்து வார்த்த ரீதியான தேடல் மற்றும் ஆழ்ந்த ஆராய்ச்சிக் காக இந்த விருது வழங்கப் பட்டுள்ளது.